Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

# Questions:

## 5 Marks

1.அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 1.4.2017 | 31.3.2018 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வங்கி இருப்பு | 14,000 (வ) | 18,000 (ப) |
| கைரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

அகமது தனது சொந்தப் பயனுக்காக ரூ. 40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர் ரூ. 16,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

## 3 Marks

2.பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31ஆம் நாளைய முதல் கண்டறியவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 27,500 |
| உரிமையாளர் தன் சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது | 5,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 2,500 |
| அவ்வாண்டின் இலாபம் | 10,000 |

3.பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று முதல் | 2,50,000 |
| 2018, மார்ச் 31 அன்று முதல் | 2,75,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 15,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | ? |

## 2 Marks

4.பின்வரும் விவரங்களிலிருந்து, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |

5.பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலைக் கணக்கிடவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் | 50,000 |
| வெளித் திருப்பம் | 6,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,60,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனீந்தோர் | 70,000 |

## Multiple Choice Question

6.கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு _____.
(a) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு (b) மொத்தக் கடனாளிகள் கணக்கு (c) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு
(d) மொத்தக் கடனீந்தோர் கணக்கு

7.சட்ட நிபந்தனைகள் காரணமாக _____ ஒற்றைப் பதிவு முறையைப் பயன்படுத்துவதில்லை.
(a) நிறுமங்கள் (b) வங்கிகள் (c) நிதி நிறுவனங்கள் (d) தனியாள் வணிகம்

8.ஆயத்த ஆடைகள் நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ.60,000 அவரது முதல் ரூ.3,40,000 எனில் அந்நிறுவனத்தில் சொத்துக்கள் _____ ஆகும்.
(a) ரூ.2,80,000 (b) ரூ.2,00,000 (c) ரூ.4,00,000 (d) ரூ.5,00,000

9.வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற மற்றும் கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கத்திற்கு _____ தன்மைகளும் பதியப்படுகின்றன.
(a) ஒரு (b) இரண்டு (c) மூன்று (d) இவை எதுவுமில்லை

10.2010 ஜனவரி 1-ல் கடனீந்தோர் ரூ.1,21,000. 2010 டிசம்பர் 31-ல் கடனீந்தோர் தொகை ரூ.1,30,000. அவ்வாண்டில் கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ.2,09,000 எனில் அவ்வாண்டில் கடன் கொள்முதல் _____ ஆகும்.
(a) ரூ.2,00,000 (b) ரூ.2,09,000 (c) ரூ.2,18,000 (d) ரூ.2,07,000